# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 22, 2025 Weekly E-paper ● February 22, 2025



# ‘அமைச்சர்க்கழகு அறிந்து பேசுதல்’ ‘இருமொழி’தான் எங்கள் கொள்கை!

எழில்.இளங்கோவன்

## 351ஆவது பிரிவை நீக்குவதே நிரந்தரத் தீர்வு!

-வெற்றிச்செல்வன்

## பெரியாரின் கைத்தடி!

தலையங்கம்

## பேரவையின் கண்டன ஆர்ப்பாட்டம்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, பிப்ரவரி 22, 2025 Weekly E-paper ●February 22, 2025

# ‘அமைச்சர்க்கழகு அறிந்து பேசுதல்’ ‘இருமொழி’தான் எங்கள் கொள்கை!

## எழில்.இளங்கோவன்





மிரட்டுகிறார் ஒன்றிய அமைச்சர், தமிழ்நாட்டை! புதிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள மறுத்தால் ரூ. 2,152 கோடி நிதியை விடுவிக்க சட்டத்தில் இடம் இல்லை என்றும், தமிழ்நாடு அரசு இந்திய அரசமைப்புக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்றும் அவரின் வாரணாசிப் பேச்சு நம்மை மிரட்டும் தொனியில் இருக்கிறது.

அதற்கு உடனடியாகத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவு மும்மொழிக் கொள்கையைக் கட்டாயமாக்குகிறது?... எங்கள் உரிமையைக் கேட்கிறோம். உங்கள் சொத்தைக் கேட்பதுபோல திமிராகப் பேசினால், தமிழர்களின் தனிக் குணத்தை டில்லி பார்க்க வேண்டியிருக்கும்" என்று சூடாகப் பதில் சொல்லியிருக்கிறார்.

புதிய கல்விக் கொள்கை என்பதே மும்மொழிக் கொள்கையாக இந்தியைத் திணிக்கும் பா.ஜ.கவின் திட்டம்தான். இதுகுறித்து ப. சிதம்பரம், தர்மேந்திர பிரதானுக்குத் தமிழ்நாட்டின் வரலாறு தெரியாது என்று சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டின் வரலாறு இருக்கட்டும், முதலில் இந்தியின் வரலாறாவது தர்மேந்திர பிரதானுக்குத் தெரியுமா?

இந்தி என்பது ஒரு தனித்தன்மை கொண்ட மொழியன்று. இது ’மேல்நாட்டு இந்தி’ ’கீழ்நாட்டு இந்தி’ ’பிகாரி இந்தி’ என்று மூன்று பிரிவுகளாலானது.

கங்கையாற்றுக்கு மேற்கே பஞ்சாப், அதன் தெற்குப்புற நிலப்பகுதிகளில் பேசப்படும் ’பங்காரு’ , வடமதுரா பகுதிகளில் ’பிரஜ் பாஷா’, கங்கை- யமுனைக்கு இடைப்பட்ட பகுதிகளில் பேசப்படும் ’கனோஜ்’, ’பந்தலி’ ’உருது’ ஆகியவைகள் ’மேல்நாட்டு இந்தி’யாகும்.

அயோத்திப் பகுதிகளில் பேசப்படும் ’அவதி’ ’பகேலி’ ’சத்தீஸ்கரி’ ஆகியவை ’கீழ்நாட்டு இந்தி’.

’மைதிலி - போஜ்புரி - மகதி’ ஆகியவை ’பிகாரி இந்தி’ என்று ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி மறைமலை அடிகளார் ’இந்தி பொதுமொழியா?’என்ற அவரின் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். மாநிலத்திற்கு மாநிலம் இந்தியில் வேறுபாடு இருப்பதாகவும் அடிகளார் தெளிவாகச் சொல்கிறார். இப்படித் தனித்தன்மையற்ற, மொழி வேறுபாடுகளை உடைய இந்தி எப்படி ஒரு ஒன்றியத்தின் ஆட்சிமொழி ஆகமுடியும்? இதையெல்லாம் தர்மேந்திர பிரதான் புரிந்து கொண்டு பேச வேண்டும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

முன்பக்கத் தொடர்ச்சி...

தமிழ்நாட்டில் இருக்கும் ஒன்றிய அரசின் 'கேந்திர வித்தியாலயா' பள்ளிகளில் இந்திக்கு மட்டுமல்ல, சமஸ்கிருதத்திற்கும் கூட ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழுக்கு என்று ஒரு ஆசிரியர் கூட நியக்கப்படவில்லை. ஏன்?... மும்மொழிக் கொள்கை வழியாக முதலில் இந்தியையும், பின்னர் சமஸ்கிருதத்தையும் நுழைத்து ஆட்சிமொழியாக ஆக்க ஆர். எஸ்.எஸ். போடும் திட்டம் என்பதற்கு மேற்சொன்ன கேந்திர வித்தியாலயம் சான்றாக அமைகிறது.



முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் 7-8-1959 அன்று நாடாளுமன்றத்தில் "....அரசு காரியங்களுக்காகப் பயன்படுத்துவதற்குத் துணை, இணைமொழியாக ஆங்கிலம் இருக்கும். மக்கள் எவ்வளவு காலம் விரும்புகிறார்களோ, அதுவரை ஆங்கிலம் மாற்று மொழியாக நீடிக்கும். அதனைப் பற்றி முடிவெடுக்க இந்தி பேசும் மக்களிடம் நான் விடமாட்டேன். இந்தி பேசாத மக்களே அந்த இறுதி முடிவை எடுப்பார்கள்" என்ற ஓர் உறுதிமொழியைக் கொடுத்துள்ளார்.

இதன்மூலம் இந்தி பேசாத மக்களின் அனுமதி இல்லாமல் ஆங்கிலத்தை நீக்கவும், இந்தியை ஒரே ஆட்சிமொழியாக ஆக்கவும் மாட்டோம் என்ற நேருவின் உறுதிமொழியை இன்றைய காவிகள் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, இந்தி- மும்மொழி என்று கூச்சல் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'இருமொழிக் கொள்கையே நம்முடைய - தமிழ்நாட்டின் கொள்கை' என்பதைத் தெளிவாகச் சொல்லி அது தீர்மானமாகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்று வரை தொடர்கிறது, இனியும் தொடரும்.

இந்திய ஒன்றியத்தில் இந்தி பேசுபவர்களை விட அம்மொழியைப் பேசாதவர்களே அதிகம் இருக்கிறார்கள். எனவே இந்திய அரசியலமைப்பின் 8ஆம் அட்டவணைப்படி 22 தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கவேண்டும். ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக வைக்கவேண்டும். இதுவே கூட்டாட்சிக்குப் பெருமை சேர்க்கும்.

அதைவிட்டுவிட்டு மும்மொழியை ஏற்க வேண்டும், இந்தி வழியாக சமஸ்கிருதம்தான் ஆட்சியில் இருக்க வேண்டும், ஏற்காவிட்டால் 40 லட்சம் மாணவர்களின் கல்வியைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம், கல்வி நிதியைத் தரமாட்டோம் என்று அடாவடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தால் எங்கள் முதல்வர் சொன்னதுபோல, "தமிழர்களின் தனிக் குணத்தை டில்லி பார்க்க வேண்டி இருக்கும்".

மொழிக் கொள்கையில் தமிழ்நாட்டின் கடந்தகால வரலாறு, அப்படித்தான் இருந்திருக்கிறது. ●

# 351ஆவது பிரிவை நீக்குவதே நிரந்தரத் தீர்வு!

*Article 351: It shall be the duty of the Union to promote the spread of the Hindi language.*

அதாவது இந்தி மொழியைப் பரப்புவது ஒன்றிய அரசின் கடமையாகும் என்கிறது இப்பிரிவு.




இந்த ஒரு உறுப்பைக் காரணமாக வைத்துக் கொண்டே இந்தியானது பல்வேறு இடங்களிலும், பல்வேறு தளங்களிலும் நம் மீது திணிக்கப்படுகிறது.

இப்பிரிவு இருக்கும் வரை இந்தித் திணிப்பு இருக்கும். இந்திய மொழிகளில் ஒன்றான இந்திக்கு, வேறு எந்த இந்திய மொழிக்கும் தரப்படாத முக்கியத்துவம் ஏன் தரப்பட்டுள்ளது ? இது இந்திக்கு மட்டும் ஒரு சிறப்பான இடத்தையும் மற்ற இந்திய மொழிகளை இரண்டாம் தரமாகக் கருதப் படுவதற்கும் முக்கிய காரணமாக அமைகிறது இல்லையா?

எனவே இப்பிரிவு இந்தி ஆதிக்கத்தை நம் மீது திணிப்பதாலும், மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது என்பதாலும் மாநில சுயாட்சிக்கான நமது முழக்கங்களில் முக்கியமான ஒரு முழக்கமாக "பிரிவு 351 நீக்கப்பட வேண்டும்" என்பதும் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**-வெற்றிச்செல்வன்**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

# பெரியாரின் கைத்தடி!



தமிழ்நாடு அமைதியாக இருக்கிறது.

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற மாநிலமாக வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் வேல் எடுத்தும், காவடி தூக்கியும், திருப்பரங்குன்றத் தெருக்களில் உருண்டாலும், பிரண்டாலும் அமைதியைக் குலைத்துவிட முடியாது.

தமிழ்நாடு, இந்துவானாலும், கிருத்துவமானாலும், இஸ்லாம் என்றாலும் சமூக சமத்துவத்தைப் பேணுகிறது.

எந்த மதத்தவரானாலும் தந்தை பெரியாரின் சீர்திருத்த, சமத்துவக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள் வாழும் நாடு, தமிழ்நாடு.

இதனால் வயிறு பொருமிப்போய் இந்தக் காவிக் கூட்டங்களும், அதன் எடுபிடிகளும் மூச்சுத்திணறி, முக்கித் தவிக்கின்றன.

கொள்கை அடிப்படையில் எதிர்க்க முடியாமல் பொய் சொல்கிறார்கள், பித்தலாட்டம் செய்கிறார்கள், கலவரங்களை உருவாக்க முயல்கிறார்கள்.

ஆங்காங்கு நடைபெறும் சமூகக் குற்றங்களுக்குக் காவல்துறை உரிய நடவடிக்கை எடுத்து வந்தாலும்கூட, எதிர்க்கட்சி என்று சொல்லிக்கொண்டு அதையே பேசிப்பேசி மக்களின் கேலிக்கு ஆளாகிறார்கள்.

இது பெரியார் நாடு. நடப்பது திராவிட மாடல் ஆட்சி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதே காவிகளைக் கதிகலங்கச் செய்து கொண்டு இருக்கிறது!

ஏன் தெரியுமா? முதல்வரின் கைகளில் இருப்பது 'பெரியாரின் கைத்தடி!'

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# முதலாம் ஆண்டு நினைவு



15-02-2025 காலை 10.30 மணிக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை அலுவலகத்தில், பேரவையின் முன்னாள் அவைத்தலைவர் ஐயா கயல் தினகரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை அனுசரிக்கப் பட்டது. பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டின் அவர்கள் கயல் தினகரன் அவர்கள் படத்திற்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினார். நிகழ்வில் பேரவைப் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராஜ் உள்ளிட்டத் தோழர்களும், கயலையா குடும்பத்தினரும் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார்கள்.

# பேரவையின் கண்டன ஆர்ப்பாட்டம்









ஆரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுந்தோம்!!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை

செங்கல்பட்டு மாவட்டம்

**உலக மகளிர் நாள் பொதுக்கூட்டம்**

## "பெரியாரும் பெண்களும்"

| நாள் : மார்ச் 8, 2025 சனிக்கிழமை, மாலை 6.00 மணி | தொடக்க நிகழ்ச்சி புத்தர் கலைக்குழுவின் பெண்கள் பறையிசை | இடம் பாரதி திடல், சண்முகம் சாலை, பெரியார் நகர், தாம்பரம். |
|---|---|---|

**தலைமை :**
தோழர் **இரா.உமா**
துணைப் பொதுச் செயலாளர்

**வரவேற்புரை :**
தோழர் **தீ.ஶ்ரீஷா**

**முன்னிலை**
தோழர் **வசந்தா** தோழர் **விஜயலட்சுமி**

**கருத்துரை :**
தோழர் **மகாலட்சுமி** தோழர் **திராவிடமங்கை** தோழர் **சாரதாதேவி**
தோழர் **இராகிலா** தோழர் **சபானா** தோழர் **பௌஜியா**

**வாழ்த்துரை**
திருமிகு. **ம.வரலட்சுமி**
சட்டமன்ற உறுப்பினர் - செங்கல்பட்டு தொகுதி

வணக்கத்திற்குரிய மேயர் **இரா.பிரியா**
சென்னை மாநகராட்சி

வணக்கத்திற்குரிய மேயர் **க.வசந்தகுமாரி**
தாம்பரம் மாநகராட்சி

**சிறப்புரை**
மானமிகு வழக்குரைஞர் **அருள்மொழி**
பிரச்சாரச் செயலாளர் - திராவிடர் கழகம்


திருமிகு மருத்துவர் **ஷர்மிளா**
சமூக செயற்பாட்டாளர்

**தொகுப்புரை :** தோழர் **மு.உஷா** **நன்றியுரை :** தோழர் **இ.மஞ்சுளா**

**அன்புடன் அழைக்கும்**
இரா.காவியா, இ.ம.யாழினி நறுமுகை, ப.அன்புச்செல்வி,சா.ஏ.வெண்பா, சா.ஏ.யாழினி, பி,தனிஷ்கா, இ,நங்கை, மோ,சௌஜன்யா, த,பாலசுந்தரி, மே.நிரஞ்சனா, மே.மகா சுவேதா, அ.ராஜ், அ,கயல், அ.தமிழினி, ரவி.சரண்யா, மு,சிபா, ம.அகில் காவிரி, வ.நர்மதா, எ.குணா, தீ,கெனிசா, சி.ஷெரிபா, சி.ரியா, மோ.தேன்மொழி, இரா.மதிவதனி, வெ.யாழிசை, கே.இர.அஞ்சுகம், கே.இர.கவிமதி, லோ.அ.இனியா, கா.பொன்னெழில், சூ.பிரியதர்ஷினி, சூ,ஶ்ரீமதி.

**திராவிட முழக்கம், மாத இதழ்**
**கருஞ்சட்டைத் தமிழர் - மின்னிதழ்**
**திராவிடப்பள்ளி**
**திராவிடம் 100 (வலையொளி)**

இயன்றதைச் செய்வோம் இடைவிடாது செய்வோம்



புதியகல்விக் கொள்கையை ஏற்காத தமிழ்நாட்டிற்கு, கல்வி நிதியைத் தரமாட்டோம் என்று ஆணவமாகப் பேசிய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக, சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் 21-02-2025 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் தொடக்கி வைத்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்.